காலைக்கதிர் (03.08.2025)

# இ.எஸ்.ஐ., மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணம் வழங்கல்

கரூர், ஆக. 3

புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில், வேலாயுதம்பாளையம் இ.எஸ்.ஐ., மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் விழா நடந்தது.

காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் தலைமை வகித்தார். சமுதாய மேம்பாட்டு நலப்பணியாக, காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள கிராமப்புற மக்களுக்கு கல்வி, மருத்துவம், உடல் நலம், உட்கட்டமைப்பு வளர்ச்சி, சமூக மேம்பாடு, பொருளாதார, வாழ்வாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம், கலாசாரம் மற்றும் பாரம்பரியம், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக பல்வேறு உதவிகளை செய்து வருகிறது.

அந்த வகையில், வேலாயுதம்பாளையம் இ.எஸ்.ஐ., மருத்துவமனையில் புகழூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சார்ந்த தொழிலாளர்கள், குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ் உதவிகளை பெற்று வருகின்றனர். இந்த மருத்துவமனை பயன்பாட்டிற்காக, 57,000 ரூபாய் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை, இ.எஸ்.ஐ., மருத்துவ அலுவலர் பானுமதியிடம் வழங்கப்பட்டது.



கரூர், காகித ஆலை நிறுவன வளாகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பொதுமேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் மருத்துவ உபகரணங்களை இ.எஸ்.ஐ., மருத்துவ அலுவலர் பானுமதியிடம் வழங்கினார். அருகில் முதன்மை மேலாளர் சிவக்குமார்.

**தினகரன் (03.08.2025)**

காகித ஆலை நிறுவனம் சார்பில்

# இஎஸ்ஐ மருத்துவமனைக்கு உபகரணங்கள் வழங்கல்



வேலாயுதம்பாளையம். ஆக 3: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் ரூ.57,000/- மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சமுதாய மேம்பாட்டு நலப்பணியாக காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள கிராமப்புற மக்களுக்கு கல்வி, மருத்துவம் / உடல் நலம், உட்கட்டமைப்பு வளர்ச்சி, சமூக மேம்பாடு, பொருளாதார /வாழ்வாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாக வேலாயுதம்பாளையத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இந்த மருந்தகத்தில் வேலாயுதம்பாளையம் புகழூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர் தம் குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ உதவிகளைப் பெற்று வருகின்றனர்.

இந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகப் பயன்பாட்டிற்காக ரூ.57,000 மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமுதாய நலப்பணித்திட்டத்தின் கீழ், காகித நிறுவன பொதுமேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், இஎஸ்ஐ மருத்துவ அலுவலர் டாக்டர். பானுமதியிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மைமேலாளர் (மனிதவளம்) கே எஸ் சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

தினமணி (03.08.2025)

# புகழூர் டிஎன்பிஎல் சார்பில் ஈஎஸ்ஐ மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள்



வேலாயுதம்பாளையம் ஈஎஸ்ஐ மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை மருத்துவ அலுவலர் டாக்டர் பானுமதியிடம் சனிக்கிழமை வழங்கிய புகழூர் டிஎன்பிஎல் ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன். உடன் ஆலையின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் உள்ளிட்டோர்.

கரூர், ஆக. 2: கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு(ஈஎஸ்ஐ) புகழூர் காகித ஆலை சார்பில் ரூ.57 ஆயிரம் மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

டிஎன்பிஎல் ஆலையின் சமுதாய மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஆலை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச் செல்வன் தலைமை வகித்தார். முதன்மை மேலாளர்( மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் வேலாயுதம்பாளையம் ஈஎஸ்ஐ மருத்துவமனைக்கு ரூ.57 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் மருத்துவ அலுவலர் டாக்டர் பானுமதியிடம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாலை முரசு

4-8-2025 (ஆடி 19) திங்கட்கிழமை



கரூர் காகிதஆலை சார்பில்

# மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

கரூர், ஆக.4—
கரூர் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் சமுதாய மேம்பாட்டு நலப் பணியாக காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள கிராமப்புற மக்களுக்கு கல்வி மருத்துவம் ,உடல் நலம், உட்கட்டமைப்பு, வளர்ச்சி சமூக மேம்பாடு, பொருளாதார, வாழ்வாதார ,மேம்பாடு, சுற்றுச்சூழல், மற்றும் சுகாதாரம், மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆகியவற்றிற்காக பல்வேறு உதவிகளை செய்து வருகிறது.

வேலாயுதம் பளையத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் செயல்பட்டு வருகிறது இந்த மருந்தகத்தில் வேலாயுதம் பாளையம் புகளூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ உதவிகளை பெற்று வருகின்றனர். இந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தக பயன்பாட்டிற்காக ரூ 57000 மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம் )கலைச்செல்வன் அவர்களால் இஎஸ்ஐ மருத்துவ அலுவலர் டாக்டர் பானுமதி அவர்களிடம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் (மனிதவளம்) முதன்மை மேலாளர் சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் உடன் உள்ளனர்.